தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், நேற்று (01.03.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்திய பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது!

ஒன்றிய கல்வி இணை அமைச்சர் சுகாந்தோ மஜீம்தார் பாராட்டு!

சென்னை மார்ச் 2 -

இந்திய பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது என்று சென்னை ஐஐடியில் நடைபெற்ற தொழில்நுட்பக் கண்காட்சி தொடக்கவிழாவில் மத்திய கல்வி இணை அமைச்சர் சுகாந்தோ மஜும்தார் பாராட்டு தெரிவித்தார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான 2 நாள் தொழில்நுட்ப கண்காட்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த கண்காட்சியை மத்திய கல்வி இணை அமைச்சர் சுகாந்தோ மஜும்தார் தொடங்கிவைத்துப் பேசியதாவது: -

கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதுமை கண்டுபிடிப்பு ஆகிய துறைகளில் சென்னை ஐஐடி தொடர்ந்து தலைசிறந்து விளங்கி வருகிறது. தேசிய அளவில் சிறந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் தரவரிசையில் (என்ஐஆர்எப் ரேங்க்) சென்னை ஐஐடி தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்து வருகிறது.

அந்த வகையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான தொழில்நுட்பக் கண்காட்சி இங்கு நடத்தப்படுவது பொருத்தமானதாகும்.

புதுமை, கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தொழில்முனைவு உள்ளிட்டவற்றில் முன்னணி மாநிலமாக திகழும் தமிழகம், இந்திய பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்திய தொழில் துறையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக திகழும் மிகப்பெரிய தொழிலதிபர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இந்திய நாட்டை தொழில்நுட்ப சக்தியாக மாற்றுவதில் தமிழகத்தின் பங்களிப்பு அளப்பரியது. உலக அளவில் உற்பத்தித் துறையில் இந்தியா புதிய தலைமையாக மாறி வருவதிலும் தமிழகத்துக்கு முக்கிய பங்கு உண்டு.

வரும் 2047 ம் ஆண்டுக்குள் இந்தியா வல்லரசாகவும் ஸ்டார்ட் - அப் நிறுவனங்களின் தேசமாகவும் மாறும். அந்த இலக்கை விரைவாக எட்டுவதில் உயர் கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. மத்திய அரசு புதுமை, கண்டுபிடிப்புகள், தொழில்நுட்ப தீர்வுகள், ஆராய்ச்சி துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆராய்ச்சித் துறையில் கணிசமான முதலீடு செய்துள்ளது. மத்திய பட்ஜெட்டில் ரூ.1.2 லட்சம் கோடி கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடத்தக்க தொகை ஆராய்ச்சிக்கும் தொழில் நுட்ப மேம்பாட்டுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்க பல்வேறு புதிய திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, டீன் மனு சந்தானம், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏஐசிடிஇ) டி.ஜி.சீத்தாராம், டிஆர்டிஓ டைரக்டர் ஜெனரல் (தொழில்நுட்பம்) மங்கல் லால் சந்த் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் 85 க்கும் மேற்பட்ட அரசு, தனியார் துறை நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களின் அரங்குகள் இடம்பெற்றுள்ளன. அதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், ட்ரோன் தொழில்நுட்பம், ஏவுகணை தொழில்நுட்பம், சூரிய மின்சாரம், காற்றாலை சக்தி, ரோபோட்டிக்ஸ் தொழில் நுட்பம், மனிதர்களின் உருவத்தைப் பெற்றிருக்கும் ஹியூமனாய்டு ரோபோக்கள் தொடர்பான தொழில்நுட்பங்கள் மற்றும் மாதிரிகளை காணலாம். இந்த கண்காட்சி நேற்று (சனிக்கிழமை) நிறைவடைந்தது.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சுதா தீனதயாளன் தலைமையில்

மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மகளிர் நிர்வாகிகளுக்கு நல உதவிகள்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி வழங்கினார்!

சென்னை, மார்ச் 2-

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் சுதா தீனதயாளன் எம்.சி- தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்த நாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் நிர்வாகிகளுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 8, மாநில உரிமையின் போராளி! மாதரை காக்கும் கொடையாளி!! எனும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 01.03.2025 சனிக்கிழமை அன்று காலை 10 மணியளவில், சென்னை, எழும்பூர், பயாஸ் மஹாலில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் சுதாதீனதயாளன் எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அவர்கள் முன்னிலையில், "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு"! என்ற உறுதிமொழியை ஏற்று சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் நிர்வாகிகளுக்கு கழகப் பொதுச் செயலாளர் திருமதி. கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

கோ.ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ். எம்.நாதன், புனிதவதி எத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரிதா மகேஷ் எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி, இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், ஜி.வி.நாகவள்ளி, எல். சுந்தர்ராஜன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி, பாத்திமா முசம்மிர் எம்.சி, எம்.அண்ணபூரணி, கே.வள்ளி, கே.என். ஸ்நோபா, ஜே.தேவ கிருபை, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ். விஜயலஷ்மி, சூர்யாரகு, அமுல்பாண்டியன், எஸ். ஜான்சிராணி, சகினாபேகம், யு.இலக்கியா, எம்.எழில் இ.மொய்தீன், டால்பின் எஸ். ஹரி, புதிதாமோகன், ஆர்.அம்மு, அ.சுகந்தி வரவேற்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் மேயர் பிரியா ராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.எம். யாழினி, பகுதி மகளிர் அணி அமைப்பாளர்கள் - பகுதி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள்: ஆர்.மணி மேகலை, டி.தமிழ்செல்வி, தரணிசீனிவாசன், எஸ்.அருள் செல்வி, ஈஸ்வரிகண்ணன், ஆர்.பிரேமா, ஜெ.வரலட்சுமி, எஸ்.சந்திரகலா, அனுஷியா பாண்டுரங்கன், பிரேமாதயாளன், ஆர்.கோமதி, கே.ஜெயந்தி, ஜே.சுகந்தி, சி. அனிதா, பி.கலைவாணி, என். ராஜகலா, டி.விமலா, எம். கிரிஜா, சாந்தி, மாசிலாமணி, ஆர்.இருதயமேரி, எம்.கிருஷ்ணவேணி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன், கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே. உமாகாந்த், பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, க.நந்தீஸ்வரன், டாக்டர்.ஏ.பி. பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. மாமன்ற உறுப்பினர்கள்: எம்.தாவூத் பீ, கே.சாரதா, அ.நிர்மலாதேவி, வி.மலர்கொடி, வதா வாசு, எல். ரமணி, எஸ்.தமிழ்ச்செல்வி, டி.யோகப்பிரியா, பி.அமுதா, எஸ்.உமா, சி. ஸ்ரீதணி, என். உஷாநாகராஜ், கே.பொற்கொடி, மு.சரவணன் ஆகியோர் சிறப்பித்த னர்.

இந்நலத்திட்ட விழாவில் மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் நன்றி கூறினார்.

2024 - 25 ஆம் கல்வியாண்டிற்கான பொதுத் தேர்வு எழுதவுள்ள

மாணவர்கள் - தேர்வர்கள் தங்களது ஐயங்களை தீர்க்க தேர்வுக் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொள்ளலாம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, மார்ச்.2-

2024-25-ஆம் கல்வியாண்டிற்கான பொதுத் தேர்வு எழுதவுள்ள 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,21,057 தேர்வர்களும், 11-ஆம் வகுப்பு பொதுத்தேர்வினை 8,23,261 தேர்வர்களும், மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை 9,13,036 தேர்வர்களும் தேர்வெழுதவுள்ளனர். மாணவர்கள்/தேர்வர்கள்/பொதுமக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங்களை தேர்வுக் கட்டுப்பாட்டு அறை - தொடர்பு எண்கள் 9498383075 / 9498383076 தெரிவித்து பயன் பெறுமாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கேட்டுக்கொண்டுள்ளார்.

2024-25-ஆம் கல்வியாண்டிற்கான மார்ச்/ஏப்ரல் - 2025 பொதுத் தேர்வுகள் மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கு 03.03.2025 முதல் 25.03.2025 வரையும், மேல்நிலை முதலாம் ஆண்டிற்கு 05.03.2025 முதல் 27.03.2025 வரையும், பத்தாம் வகுப்பிற்கு 28.03.2025 முதல் 15.04.2025 வரையும் நடைபெறவுள்ளது.

பொதுத்தேர்வுகளை சிறப்பாக நடத்திட கண்காணிப்பு அலுவலர்கள் , ஆய்வு அலுவலர்கள் மற்றும் அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கான மாநில அளவில் கூட்டம் 13.02.2025 அன்று நடத்தப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்வுகளை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாவட்டத்திற்கு சென்று தேர்விற்கு முந்தைய ஏற்பாடுகள் அனைத்தையும் பார்வையிட்டு உறுதி செய்துள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத் தேர்வுக் குழு அமைக்கப்பட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி அக்கூட்டத்தில் தடையில்லா மின்சாரம் வழங்கிட மின்சாரத்துறைக்கும் தேர்வுப்பணிகளுக்கு பாதுகாப்பு வழங்கிட காவல்துறைக்கும் தேர்வுமையங்களில் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தர உள்ளாட்சி அமைப்புகளுக்கு முன்னேற்பாடுகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலை இரண்டாம் ஆண்டுப் பொதுத்தேர்வினை 8,21,057 தேர்வர்களும், மேல்நிலை முதலாம் ஆண்டுப் பொதுத்தேர்வினை 8,23,261 தேர்வர்களும் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை 9,13,036 தேர்வர்களும் தேர்வெழுதவுள்ளனர்.

மேல்நிலை இரண்டாம் ஆண்டிற்கு 3,316 தேர்வு மையங்களிலும் மேல்நிலை முதலாமாண்டிற்கு 3,316 தேர்வு மையங்களிலும் பத்தாம் வகுப்பிற்கு 4,113 தேர்வு மையங்களிலுமாக மொத்தம் 25,57,354 தேர்வர்கள் 2024-25-ஆம் ஆண்டிற்கான பொதுத்தேர்வினை எழுதவுள்ளனர்.

இத்தேர்வுப் பணியில் ஒவ்வொரு தேர்வு நாளன்றும் சுமார் 45,000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். மேலும் தேர்வு முறைகேடுகளை தடுக்க சுமார் 4800 க்கும் மேற்பட்ட பறக்கும் படையினர் தேர்வுப்பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் 20,476 மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு மொழிப்பாட விலக்கு, சொல்வதை எழுதுபவர், தேர்வெழுத கூடுதல் ஒரு மணி நேரம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள்/தேர்வர்கள்/பொதுமக்கள் தங்களது புகார்கள், கருத்துக்கள் மற்றும் ஐயங்களை தெரிவித்து பயன்பெற வசதியாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் முழுநேரத் தேர்வுக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தேர்வு நாட்களில் ஒவ்வொரு நாளும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இக்கட்டுப்பாட்டு அறை செயல்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வுக் கட்டுப்பாட்டு அறை - தொடர்பு எண்கள் 9498383075 / 9498383076

அலைபேசி தடை:-

தேர்வு மைய வளாகத்திற்குள் அலைபேசியை எடுத்து வருதல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தேர்வு பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் தேர்வறையில் தங்களுடன் அலைபேசியை வைத்திருப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவுரையை மீறி தேர்வர்களோ அல்லது ஆசிரியர்களோ அலைபேசி/இதர தகவல் தொடர்பு சாதனங்களை வைத்திருப்பதாக கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒழுங்கீனச் செயல்பாடுகள்:-

தேர்வு நேரங்களில் தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டால் குற்றங்களுக்கு தக்கவாறு தண்டனைகள் வழங்கப்படும். மேலும் ஒழுங்கீனச் செயல்களுக்கு உடந்தையாகவோ / ஊக்கப்படுத்தவோ பள்ளி நிர்வாகம் முயலுமேயானால் பள்ளித் தேர்வு மையத்தினை இரத்து செய்தும், பள்ளி அங்கீகாரத்தினை இரத்து செய்திட பள்ளிக் கல்வி/தனியார் பள்ளிகள் இயக்குநருக்குப் பரிந்துரை செய்தும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஏ.நாகராசன் தலைமையில்

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

ப.சிதம்பரம் எம்.பி. - கே.சுப்பராயன் எம்.பி. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. புகழுரை!

சென்னை, மார்ச் 2-

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் எ. நாகராசன்- தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டம், திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு கொளத்தூர் மேற்கு பகுதியில், மாபெரும் பொதுக் கூட்டம் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி, CPI கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி, துணைதலைவர், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, ஆகியோர் புகழுரைத்தனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 9, மக்கள் உயர்வே முதல்வர் சிந்தனை! மாநிலம் கண்டது மகத்தான சாதனை எனும் தலைப்பில் கொளத்தூர் மேற்கு பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் 01.03.2025 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அகரம், பெரவள்ளூர் சதுக்கத்தில் நடைபெற்றது. இப்புகழரங்கத்தில் கொளத்தூர் மேற்கு பகுதி கழக செயலாளர் திரு.எ.நாகராசன் எம்.சி, தலைமை வகிக்க, சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு"! என்ற உறுதிமொழியை ஏற்று, ஒன்றிய முன்னாள் அமைச்சர் திரு.ப.சிதம்பரம் எம்.பி, CPI கட்டுப்பாட்டுக்குழு தலைவர் திரு.கே.சுப்பராயன் எம்.பி, துணைதலைவர், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும், இந்த பொதுக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜெ.டில்லிபாபு எம்.சி, த.கு.வெங்கடேஷ்வேம்புலி. ஐ.சி.எப்.வ.முரளிதரன், மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்குமார், தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், பி.கே. மூர்த்தி, கவிஞர் நன்மாறன், கே.எஸ்.எம்.நாதன், கோ.ஏகப்பன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமார் எம்.சி. வே.வாசு, எம்.சாமிகண்ணு, எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரிவீரராகவன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எஸ். தனசேகர், துரைகண்ணன், மா.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், வானவில் விஜய் நா. துலுக்காணம் ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், சுதாதீனதயாளன் எம்.சி ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, பி.விஜயகுமார் எம். விநாயகம், க.பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ணாமூர்த்தி, இரா. வீரமணி, கொளத்தூர் மேற்கு பகுதி நிர்வாகிகள்: இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, ஆர்.ஹரிபாபு, ஆர். முரளி, அ.ஆனந்தராம், தோழர் ஜீ.சுப்பிரமணி. கொளத்தூர் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், எஸ்.முருகன், என்.ராமச்சந்திரன், எம்.டி. தமிழ்ச்செல்வன், பி.நந்தகுமார், O.ரமேஷ், தோழர் வி. ரவி. மாமன்ற உறுப்பினர்கள்: கே.சாரதா, எம்.தாவூத்பீ, சி. ஸ்ரீதணி, டி.யோகபிரியா, பி. அமுதா. கொளத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: பி. பழனி, இளா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் கே.ஜார்ஜ்குமார், பி.பொன்முடி, பி.டி.சி.ரவி, பி.ஊமைதுரை, ப.அன்பரசு டி.சந்திரசேகர், கே.பி.ஆதவன்மணி ஆகியோர் சிறப்பித்தனர்.

இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் பி.அதிபதி, எம். ஜெ.சி.பாபு ஆகியோர் நன்றி கூறினர்.

முதலமைச்சர் காணொளி வாயிலாக சென்னையில் கலங்கரை ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து தருமபுரியில் மாவட்ட ஆட்சியர் ரெ. சதீஸ் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி ஆகியோர் தருமபுரி அரசு மருத்துவமனையில் கலங்கரை போதை மீட்பு மறுவாழ்வு மையத்தினை குத்துவிளகேற்றி துவக்கி வைத்தனர். நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன், மருத்துவக்கல்லூரி முதல்வர் அமுதவல்லி, மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் - கழகத் தலைவர் பிறந்தநாள் விழா !

உறுதிமொழி ஏற்று தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

சென்னை, மார்ச்.2-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க, ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மாதவரம் வடக்கு பகுதி 17 ஆவது வட்டத்தில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

வட்டக் கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி .பாலாஜி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன், எஸ். சிவகுமார், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் பி. சுதர்சன், எம். ஜான்சன், ஜி. பூபாலன், பாக முகவர் டி.திவாகர், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் கழகத்தினர், முதலமைச்சர் ஆணைப்படி பிறந்த நாள் விழாவை துவங்குவதற்கு முன்பு ஒரே இலக்கு தமிழ்நாட்டின் நலனையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம், தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று உறுதிமொழி ஏற்றனர். பின்னர் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கழக கொடியேற்றி தூய்மை பணியாளர் உடன் கேக் வெட்டி கொண்டாடினார். அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் கேக் வழங்கப்பட்டது. பின்னர் அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது.கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்கிய திராவிட முன்னேற்ற கழக நிர்வாகிகளுக்கு தூய்மை பணியாளர்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள். முன்னதாக தீயம்பாக்கம், பெரியார் நகர், காந்தி நகர், சின்ன தோப்பு ஆகிய பகுதிகளில் கழக நிர்வாகிகள் ஆங்காங்கே கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி முதலமைச்சர் பிறந்த நாளை உற்சாகமாக கொண்டாடினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் என். நாகராஜன், வி. சுமிர், ஜி .கார்த்திக், காந்திநகர் சுந்தரம், எஸ். விஜயன், அரியலூர் வினோத், நாகராஜ், ராஜ்குமார், வடபெரும்பாக்கம் மைக்கேல், செந்தில், கார்த்திக், கோவிந்தன், சண்முக சுரேஷ், இளையபெருமாள், பாலகிருஷ்ணன், மயிலன், பாபு, மாதவன், சசிகுமார், செட்டிமேடு நாகலிங்கம் ,கீர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் சி. பாலாஜி, சி. மூர்த்தி, எம் .என். அஜய் தென்னவன், கே. சண்முக பிரியன், எஸ். சிவகுமார், எம். ஜான்சன் இ சுதர்சன், ஜி. பூபாலன், டி.திவாகர், என். நாகராஜன், வி.சுமிர், ஜி. கார்த்திக், மைக்கேல், செந்தில், கார்த்திக், கோவிந்தன், வழக்கறிஞர் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.